உ

கடவுள்துணை.

அழகர்கோவில்

பதினெட்டாம்படி

# கருப்பணசாமிபேரில் விருத்தம்.

திருப்போரூர்

டி. கோபால் நாயகர்

அவர்களாற்றமது

மதராஸ், என். சி.

கோள்டன் அச்சியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பெற்றது

1914.

17-18 காளத்தியப்ப முதலிவீதி மதராஸ் என். சி.

# விளம்பரம்.

## சாதகாலங்காரம்.

### மூலமும் - உரையும்.

இச் சென்னையின்கண் முன்னோர்கள் அருளிச்செய்த பல சோதிட நூல்கள் உள்ளன. அவற்றுள் இரண்டொரு நூற்களே மிக்க பயன்படத்தக்கவைகளும், வரிசைக்கிரமமாகச் செய்யப்பட்டவையுமாகும். அப்படிப்பட்டவற்றுள் சாதகாலங்காரம் என்பதுஎன்று அதற்கு இதுவரைக்கும் உரையில்லாத பெருங்குறையை நோக்கிப் பலரும் என்னை வற்புறுத்தியபடியால் அதற்குத் தக்கவாறு உரையெழுதி பன்னிரண்டு பாகங்களும் நன்றாய் விளங்கும்படி விளக்கி அச்சிட்டிருக்கின்றோம். வேண்டியவர்கள் எம்மிடத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

இதன் விலை ரூபா 1 8 0

உ

கடவுள் துணை.

# அழகர்கோவில்

# பதினெட்டாம்படி

# கருப்பணசாமிபேரில் விருத்தம்.

மந்திரஞ் சேர்சோலை மலைவாழ் கருப்பணன்மேற்
பந்தியுறச் செந்தமிழைப் பாடவே—சிந்துவிடஞ்
சொந்தமா பிசைந்தருந்து சுந்தரன் மகிழ்ந்துதந்த
கந்தன்முன் பிறந்ததந்தி காப்பு.

காருலவுமௌலியிற் சந்திரகாவிப்பெரிய காங்ரு வுருமாலதுவினிற, கதிரொளிவுபோலே விளங்கின்ற கிரீடமுங் காண்டப விற்புருவமுங், தாருலவு கண்டமு மிருகுழையிலேபூண்ட தங்கக் கடுக்கனழகுந், தாமரைமலர்க்குநிக ரானமுகமுங்கனி தனைப்பழிக் கின்றவாயும், வாருலவுமார்பிலே நவரத்தினமாலையும் மந்திரகிரிபோற் புஜமுமா, வண்டப்பிசாசுகளை மார்பைப்பிளக்கின்ற வாள்பிடிக்கின்றகரமுஞ், சீருலவுமிடையினிற் கச்சையுங்

கிண்கிணி திருப்பதங் காண்கவருவாய், திருவது தலங்கு மிரு நவபடிவிளங்கிவளர் ஜெயகருப்பணசாமியே. (க)

இருகாலிலேவீர தண்டைபொற்கொலுசுட னேற்றுகிண்கிணிகளாட, யிடைதனிற் கச்சையு மதிலிட்ட குஞ்சமு மிசைவான மணிகளாட, மருவணியுமார்பிலே நவரத்தினமாலையொடு வயிரப்பதக்கமாட, மந்திரகிரி போலவிரு புஜமாடகைதனில் வாங்குவறு வாளுமாட, முருகணிந்திடுகுழைக் காதினில் விளங்குசொரி முத்துக்கடுக்கனுட, முருக்கிவிடுமீசையதுபடபடென்றேயாட மோகனக்காளியோட, சிருதுகூளிகள்வந்து கவியதுபடித்திட செந்தமிழ்க்குதவவருவாய், திருவது தலங்குமிரு நவபடிவிளங்கிவளர் ஜெயகருப்பணசாமியே (உ)

மூன்றுமத மும்பொழிந் திடும்வேழமுகவனே மோதிநிர்த்துளிபண்ணி, முருகனென்பவனையும் கைலைதனிலேகிட முள்ளன்பினுலெறிந்து, தோன்றுரண காலவயிரவனையுஞ் சங்கரச் சூறிக்கொண்டேகிழித்து, தூங்கிருகியதேவ ராஜனையும்வச்சிரமது தோன்றுதண் டாலடித்தும், தாண்டவமதாடிமுன் மக்கனிடசாணையுற் றவிழ்தலையெலாமறுத்து, கலையெலா மோமகுண் டந்தனிலெ

றிந்தவர்கள் தன்னுடைய குருதியுண்டு, தீண்டவரும் பேர்களை வதைத்தரண வீரன் சினேகிதம் பிரியாதவர், திருவது துலங்குமிரு நவபடிவிளங்கிவளர் ஜெயகருப் பணசாமியே. (ரு)

நாலுகாலிலுவீர தண்டைகளணிந்து அதில் நவரத் தின கொலுசணிந்து, நகநகெனவீரகண்டாமணி தரித்து அதில் நற்சிலம்பொலியணிந்து, வாலதின் முளைக்கின்ற ரோமமதிலேமுத்து வயிரமுங் கோர்வையிட்டு, மரகத த்தாலிழைத் திடுசேணமுதுகினில் வைத்தங்கவடிதரித் துச், சாலுவைகரித்துக் கலிக்கித்துருவுஞ் சதங்கைமா லையுமணிந்து, தங்ககடிவாளமிட் டுப்பத்மராகமிது தா னென்றுபேருமிட்டு, சீலமுட னடனமிடு பரிமேலெழுந் துவரு சிங்கக்கருப்பனீயே, திருவது துலங்குமிரு நவபடி விளங்கிவளர் ஜெயகருப்பணசாமியே. (சு)

அஞ்சுவர்ணக்குடையி லாயிரம்ரத்தினமழுத்துநற் குடையாயிரம், அலங்கிர்தமானமுத்துக்குடையில்நூறா யிரமழகுபெறவேநெருங்க, கஞ்சனக்கருவியதுமுதலான மேளங்கள் கடலோசை போற்றொனிக்க, கவுரியதுவீசி டப் பூதவேதாளங்கள் கட்டியங்கூறிவரவே, பஞ்சப்பசா

சுகளை வச்சிரதண்டத்தினுற் பல்லுதிரவேயடித்து, பரி மேலெழுந்துவரு முத்லதையனேவுனது பாதமலர் போற் றிசெய்தேன், செஞ்சொற் றமிழ்க்குதவ வந்துநின்கிரு பை செய்துரட்சித்தருளுவாய், திருவது துலங்குமிரு நவபடிவிளங்கிவளர் ஜெயகருப்பணசாமியே. (ரு)

ஆரூருமுததிரை செந்திதிருநெல்வேலி அமராபதி த்திருக்கோஷ்டியூர், ஆடானைவேடகம் முத்தூருமேல மலையாளமது விருதுகொண்டு, பேரூருதங்கமங்கலநேம ம்நெல்லைநகர் பிறசையூர் வேலைநகரும், பேரைநகர் புத் தூரு சங்கமதுராபுரி பெருந்துறை திருப்புவனமுங், காரூரு கண்ணனூ ரிளசைநகர்பொன்மருவு காளைநகர் சிவகெங்கையும், கரைநகர்சதுர்வேத மங்கலம்பிரசை யூர் கடையூரு தள்ளார்குளம், சீரூருசோலைமலை யேழு லகமும்புகழ் சிங்கமேமுத்தையனே, திருவதுதுலங்கு மிக நவபடிவிளங்கிவளர் ஜெயகருப்பணசாமியே. (சா)

ஏழுலகமும்புகழ் தீர்த்தமும்பொன்கிரிக் கிணையான சோலைமலையும், ஏழைகளுக்கதிகவர மளிக்கின்றபதினெ ட்டாம்படிபெருமையும், வளம்பெருநதிசளு முகிலைக்கி ளித்திட வளர்ந்திட்டசோலைவளமும், வையகமெலாம்

புகழு லங்காப்புரியின் வளவையிங்காவினமுகும், நளவி ஸ்வகர்மனிட திஸ்டியனையதால்வந்த நற்றிருப்பணிகள ழகும், நாராயணன்மகிமை யிவையாதிசேடனவ னுலே யுஞ் சொல்லவெளிதோ, செழுமலர்ப்பாதமுன் னடியா ர்கள்போற்றவே தேசியதின் மேல்வருகுவாய், திருவது துலங்குமிருநவபடிவிளங்கிவளர்ஜெயகருப்பணசாமியே.

எட்டுதிக்கதிரவாய் விட்டலறிபூதங்கள் யெச்சரிக் கைகள்சொல்லவும், யெதிரிட்டபூதப் பசாசுவேதாளங்க ளிருபதத்திற்பணியவுந், துஷ்டப்பசாசுகள் மிரண்டோ டிவீறிடத் துண்டுதுண்டாய்நறுக்கித், துலங்குவெண்கு டையது நிகழ்த்திடத்திருமருவு சோலைமலைவிட்டிறங்கி, வட்டமிடுபரியின்மே லேறிவந்தடியார்கள் மனத்துயர் விலக்கிமிகவே, வரமதுஅளித்திடக் கார்மேகவண்ண னே வரவேணுமிதுசமயமே, சிஷ்டர்புகழ்வைகுந்த வா சமாதவனுடைய சேயனின்கிருபைசெய்வாய், திருவது துலங்குமிருநவபடிவிளங்கிவளர்ஜெயகருப்பணசாமியே.

ஒன்பதெனு நவரத்தின மாலைகள்விலங்கிட ஒட்டி யாணந்துலங்க, உலகேழும்விலைபெற்ற கவசகுண்டல முருகு உனதுகாதினிவிலங்க, கம்பளப்பில்லிவஞ் சனை

யேவல்சூனியங் கட்டுகள்விட்டோடிடக், கண்டித்துவரு
கின்ற யேவல்ப்பசாசுகளை கைவாளினால்வதைத்து, கொ
ம்புசேகண்டிமத் தாளந்தொனித்திடக் கூடியதுவிருது
கூறக், கொல்லிமலை தனைவிட்டு வந்தவடியார்களிட குடி
காத்துவரமளிக்க, செம்பவளவாயது திறந்துதானின்கி
ருபை செய்துரட்சித்தாளுவாய், திருவது துலங்குமிரு
நவபடிவிளங்கிவளர் ஜெயகருப்பணசாமியே. (கூ)

பத்துமிருநான்குபடி மேவுமுத்தையனே பரமசிவ்
தன்மருகனே, பங்கயஞ்சேரழகர் வாசற்பிரதானியே
பத்தர்க்கிரங்குமுதலே, முத்தையனேவுனது முன்சாமி
னுதன் மொழியும்விண்ணப்பமொன்று, முன்மடுவில்நீர்
பொசிக் கின்றதந்தியைவந்து முதலையது தான்பிடிக்க,
கர்த்தனே ஆதிமூல மேயென்றும்மதக் கரிமுறையறிக்
கையிட்ட, காரணமறிந்தந்த ஆதிமூலமேவந்து காத்தரு
ளினதுபோலவே, சித்தனே வுனதடிமை குடிகாத்திடப்
பெரிய தேசியதின் மேல்வருகுவாய், திருவது துலங்கு
மிரு நவவடிவிளங்கிவளர் ஜெயகருப்பணசாமியே. (க0)

கருப்பணசாமிபேரில் விருத்தம்

முற்றிற்று.